2004 நவம்பர் 19]

45—

மருத்துவர் மற்றும் செவிலியர்

***56122—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் 6 மருத்துவர்களும், 10 செவிலியர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எத்தனை மருத்துவர், எத்தனை செவிலியர் என்று சொல்வது எங்களுக்குப் புரியவில்லை. எனக்குப் புரியவில்லை. தெளிவாக அவர் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டு, அதன் பிறகு உங்களுக்கு என்னுடைய துணை வினாவைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: தலைவர் அவர்களே, நான் இதுவரையிலும் மருத்துவர்களைப் பற்றி சொல்லவே இல்லை. அரசு மருத்துவமனையைப் பற்றித்தான் சொன்னேன். நீங்கள் முதலில் புரிந்துகொள்ளுங்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் (குறுக்கீடு) நீங்கள் கேட்ட கேள்வி, இப்பொழுதுதான் மருத்துவர்களைப் பற்றி கேள்வி கேட்கிறீர்கள். இதுவரையிலும் கேட்ட கேள்விகளுக்கு மருத்துவர்கள் என்று நான் எங்கே சொன்னேன்? உங்கள் குமாரபாளையம் மருத்துவமனையிலே ஒரே ஒரு டாக்டர் vacancy தான் உள்ளது. தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால்—நான் இப்பொழுது விளக்கம் கொடுக்கிறேன். தமிழகத்திலே— மருத்துவர்களின் எண்ணிக்கை 77,333. இந்த 77,333 மருத்துவர்களில் இறந்தவர்கள், வெளி நாட்டுக்குச் சென்றவர்களையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 62 ஆயிரம் மருத்துவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் கூறியதுபோல Taluk மருத்துவமனைகள், Non-Taluk மருத்துவமனைகள்

மற்றும் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனைகளில் வேலை பார்க்கக்கூடிய மருத்துவர்களின் எண்ணிக்கை 2,222. தற்சமயம் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய காலி இடங்கள் 126. தங்களுடைய கோரிக்கை இருக்கக்கூடிய தாலுகா மருத்துவமனையில் மொத்தம் ஒரு vacancy தான் இருக்கிறது.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை தயவுசெய்து நீங்களாவது படித்துப்பார்க்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) மருத்துவர்கள், செவிலியர்களைப் பற்றிதான் இந்தக் கேள்வியே. அதைப்பற்றி நான் சொல்லவில்லை என்று அமைச்சர் சொல்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறீர்கள். எத்தனை மருத்துவர்கள் இருக்கிறார்கள், எத்தனை செவிலியர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். அடுத்து துணைக் கேள்வி கேட்கும்போது கேளுங்கள்.

முற்பகல் 10-35

திரு. ஐ. கணேசன்: எத்தனை மருத்துவர்களைப் போட்டார்கள் என்று தெரியவில்லையே. எத்தனை மருத்துவர்களைப் போட்டார்கள் என்று தெரிந்தால்தானே துணைக் கேள்வி கேட்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6 மருத்துவர்கள் இருக்கிறார்கள். 10 செவிலியர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: பதில் கொடுத்திருக்கிறேன். அதற்கு மேல் என்ன வேண்டும் என்று சொல்கிறார்? ஒட்டுமொத்தமாகக் கேட்கிறீர்களா? அல்லது உங்கள் குறிப்பிட்ட மருத்துவமனைக்குக் கேட்கிறீர்களா? நான் அப்போதே சொல்லிவிட்டேன்.

திரு. ஐ. கணேசன்: இந்தப் பதில் ஒட்டுமொத்த மருத்துவர்களைப் பற்றியா, குறிப்பிட்ட மருத்துவர்களைப் பற்றியா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: இல்லை. நீங்கள் கேட்ட கேள்வி குமாரபாளையம் மருத்துவமனை பற்றித்தான். நீங்கள் தமிழ்நாட்டுக்குக் கேட்கவில்லை. குமாரபாளையம் அரசு

2004 நவம்பர் 19]

மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 7 மருத்துவர்களில் 6 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 10 செவிலியர் பணியிடங்களில் 10 செவிலியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் 24 இதர பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கேளுங்கள்.

திரு. ஐ. கணேசன்: இல்லை. இதுமாதிரி சொல்வதால்தான் மற்றவர்கள் பதில் சொல்வதில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரபாளையம் என்னுடைய தொகுதி அல்ல. என்னுடைய பக்கத்துத் தொகுதி. நம்முடைய நிதி அமைச்சர் தொகுதி. நான் அங்கே சென்றபோது மருத்துவர்களும், செவிலியர்களும் மிகக் குறைவாக இருப்பதாக என்னிடத்தில் விண்ணப்பங்கள் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அதற்காக நியமித்து இருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. அதேபோல தாலுகா மருத்துவமனையான எடப்பாடி மருத்துவமனையிலே, அதேபோலத்தான் சொல்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதேபோல்தான் எல்லா ஊரும். குமாரபாளையம் மாதிரிதான் எல்லா ஊரும். அமைச்சரிடம் பதில் இருக்காது. நீங்கள் அதற்காக தனிக் கேள்வி போடுங்கள். குமாரபாளையம் மருத்துவமனை தொடர்பாக வேறு ஏதாவது துணைக் கேள்வி கேட்பதாக இருந்தால் கேளுங்கள்.

திரு. ஐ. கணேசன்: இன்னும் குமாரபாளையம் மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும், எப்போது நியமிப்பீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நீண்டகாலமாக உறுப்பினராக இருக்கிறார். நானும் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். கேட்கப்பட்ட கேள்விக்கு சிறந்த முறையிலே பதில் அளித்துக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய கேள்விகள் என்ன என்று தெளிவுபடுத்தி அதற்கும் பதில் கொடுத்திருக்கிறேன். நீங்கள் கேட்ட கேள்வியிலே இதற்குப்பதில் வரவில்லை என்றால் (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். ஒட்டுமொத்தமாக பதிலைக் கேட்டாலும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கேட்ட கேள்விக்கு

ஒட்டுமொத்தமாக விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும், அரசு மருத்துவமனையாக இருந்தாலும், இதுவரை எடுத்துக்கொண்டால் பணியாளர்களை நியமிக்க உலக வங்கியின் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் எல்லாம் 30 படுக்கைகள், 50 படுக்கைகள், 100 படுக்கைகள், 150 படுக்கைகள், 500 படுக்கைகள் என்று மாற்றி, அங்கே இருக்கக்கூடிய மக்கள்தொகையின் அடிப்படையில் மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிப்பதற்கு உலக வங்கியின் நிதி கூடிய விரைவில் ஜனவரி மாதம் கிடைக்கும். முதலாவதாக 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இருக்கக்கூடிய மருத்துவமனைகள் அத்தனையும் தரம் உயர்த்தப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்களும் நீண்ட நாள் உறுப்பினர், நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன் என்று பதில் சொன்னார். அதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பது ஒரு மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், கேள்விக்கு வாருங்கள். கேள்வி நேரத்தைப் பற்றி விவாதம் இல்லை.

வினா எண் 46, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

46—

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கோரைப்பாய் தொழில்

***13121—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் தமிழ்நாட்டிலேயே கோரைப்பாய் பின்னும் தொழில் அதிகமாக நடைபெறுவதால், அங்கு கோரைப்பாய் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?